## பகுதி 1

**① கீழ்வரும் வினாக்களுக்கு மிகப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்து, விடைக்கான எழுத்துக்குரிய கூட்டில் புள்ளடி (X) இடுக.**

1. "யாதும் ஊரே யாவரும் கேளிர்" எனப் பாடிய தமிழ்ப்புலவர்
   அ) கம்பர் ஆ) நாவலர் இ) கணியன் பூங்குன்றன் ஈ) பாரதியார்
   (அ) ☐ (ஆ) ☐ (இ) ☐ (ஈ) ☐

2. இயற்றமிழ் என்பது
   அ) இசையும் பாட்டும் ஆ) பாட்டும் நாடகமும்
   இ) உரைநடையும் பாட்டும் ஈ) இசையும் நாடகமும்
   (அ) ☐ (ஆ) ☐ (இ) ☐ (ஈ) ☐

3. இலை புதிதாகத் தோன்றிய நிலை
   அ) தளிர் ஆ) பழுப்பு இ) சருகு ஈ) கொழுந்து
   (அ) ☐ (ஆ) ☐ (இ) ☐ (ஈ) ☐

4. அறிஞர் கூடி ஒருவரையொருவர் எதிர்த்துக் கருத்துரைக்கும் அரங்கு
   அ) ஒத்திகை ஆ) தமிழ்மன்றம் இ) அரங்கேற்றம் ஈ) பட்டிமன்றம்
   (அ) ☐ (ஆ) ☐ (இ) ☐ (ஈ) ☐

5. தமிழிலுள்ள சிற்றிலக்கிய வகைகளின் எண்ணிக்கை
   அ) அறுபத்துநான்கு ஆ) நானூறு இ) தொண்ணூற்றாறு ஈ) நூற்றெட்டு
   (அ) ☐ (ஆ) ☐ (இ) ☐ (ஈ) ☐

6. **நாளை பிற்பகல் மாவீரர்விழாவுக்குச் செல்வோம்.** இதில் உள்ள தோன்றா எழுவாய்
   அ) நீங்கள் ஆ) மாணவர் இ) அவர்கள் ஈ) நாங்கள்
   (அ) ☐ (ஆ) ☐ (இ) ☐ (ஈ) ☐

7. தமிழ் இலக்கண நூல்களுள் காலத்தால் முந்தியது
   அ) நன்னூல் ஆ) திருக்குறள் இ) தொல்காப்பியம் ஈ) சிலப்பதிகாரம்
   (அ) ☐ (ஆ) ☐ (இ) ☐ (ஈ) ☐

8. தமிழினி தாயகம் சென்று, உறவுகளுக்கு உதவினாள். இச்சொல்லியம்
   அ) தனிச்சொல்லியம் ஆ) கூட்டுச்சொல்லியம்
   இ) கலப்புச்சொல்லியம் ஈ) கூட்டுக்கலப்புச்சொல்லியம்
   (அ) ☐ (ஆ) ☐ (இ) ☐ (ஈ) ☐

9. புதிய தேர், கப்பல் முதலியவற்றைச் செய்து முதன்முதலாக ஓடவிடுவது
   அ) ஒத்திகை ஆ) வெள்ளோட்டம் இ) முதலோட்டம் ஈ) ஆரம்பவோட்டம்
   (அ) ☐ (ஆ) ☐ (இ) ☐ (ஈ) ☐

10. தேம்பாவணி என்பது எச்சமய இலக்கியமாகும்?

அ) இந்துசமயம் ஆ) இசுலாமியசமயம்

இ) கிறீத்தவசமயம் ஈ) வைணவசமயம்

(அ) ☐ (ஆ) ☐ (இ) ☐ (ஈ) ☐

11. தமிழரின் வீரத்தை விதந்துகூறும் பாடல்கள் கொண்ட நூல்

அ) அறநானூறு ஆ) புறநானூறு இ) சிலப்பதிகாரம் ஈ) குண்டலகேசி

(அ) ☐ (ஆ) ☐ (இ) ☐ (ஈ) ☐

12. ஒரு சொல்லியத்தில் இரண்டாம் வேற்றுமை உருபு ஏற்றுவரும் பகுதி

அ) எழுவாய் ஆ) செயப்படுபொருள் இ) பயனிலை ஈ) அடைமொழி

(அ) ☐ (ஆ) ☐ (இ) ☐ (ஈ) ☐

13. நான் பாடசாலைக்குச் சென்றேன். **'பாடசாலைக்கு'** என்பதில் வரும் உருபு

அ) முதலாம் வேற்றுமை ஆ) இரண்டாம் வேற்றுமை உருபு

இ) மூன்றாம் வேற்றுமை உருபு ஈ) நான்காம் வேற்றுமை உருபு

(அ) ☐ (ஆ) ☐ (இ) ☐ (ஈ) ☐

14. எழுவாய் பயனிலை செயப்படுபொருள் என்பவற்றை விளக்கும் சொல்லிய உறுப்பு

அ) உவமைமொழி ஆ) அடைமொழி இ) முதுமொழி ஈ) பொதுமொழி

(அ) ☐ (ஆ) ☐ (இ) ☐ (ஈ) ☐

15. வன்னியில் ஒல்லாந்தரையும் ஆங்கிலேயரையும் எதிர்த்து வீரப்போர் புரிந்தவன்

அ) விக்கிரமசிங்கன் ஆ) சங்கிலியன் இ) எல்லாளன் ஈ) பண்டாரவன்னியன்

(அ) ☐ (ஆ) ☐ (இ) ☐ (ஈ) ☐

16. பண்டாரவன்னியனை அந்நியருக்குக் காட்டிக் கொடுத்த இரண்டகன்

அ) கதிர்காமநாயகம் ஆ) லக்மன் கதிர்காமர்

இ) குலசேகரம் வைரமுத்து ஈ) பனங்காமன்

(அ) ☐ (ஆ) ☐ (இ) ☐ (ஈ) ☐

17. தமிழரின் நன்றி உணர்ச்சியைக் காட்டும் விழா

அ) ஆடிப்பிறப்பு ஆ) திருவிழா இ) தைப்பொங்கல் ஈ) தீபாவளி

(அ) ☐ (ஆ) ☐ (இ) ☐ (ஈ) ☐

18. பண்டாரவன்னியனுக்கான நடுகல் அமைந்துள்ள இடம்

அ) யாழ்ப்பாணம் ஆ) முள்ளியவளை இ) கற்சிலைமடு ஈ) மன்னார்

(அ) ☐ (ஆ) ☐ (இ) ☐ (ஈ) ☐

19. நிலமெல்லாம் நன்னீர், பாரெல்லாம் செந்நெல், பார்க்குமிடமெல்லாம் மலர்கள். இது எந்தப் பருவகாலம்?

அ) முன்பனிக்காலம் ஆ) கோடைகாலம் இ) கார்காலம் ஈ) பின்பனிக்காலம்

(அ) ☐ (ஆ) ☐ (இ) ☐ (ஈ) ☐

20. கவிஞர் உருத்திரமூர்த்தி அவர்கள் எழுதிய பாடல்

அ) தாயின்தாலாட்டு ஆ) பொங்கல்விழா இ) காட்டுமல்லிகை ஈ) திருக்குறள்

(அ) ☐ (ஆ) ☐ (இ) ☐ (ஈ) ☐

21. மும்முடிச்சோழமண்டலம் என அழைக்கப்பட்ட நாடு

அ) சிங்கப்பூர் ஆ) இந்தியா இ) இலங்கை ஈ) பர்மா

(அ) ☐ (ஆ) ☐ (இ) ☐ (ஈ) ☐

22. உலக மொழிகள் பலவற்றில் மொழிபெயர்கப்பட்ட நூல்

அ) பத்துப்பாட்டு ஆ) எட்டுத்தொகை
இ) திருக்குறள் ஈ) சீறாப்புராணம்

(அ) ☐ (ஆ) ☐ (இ) ☐ (ஈ) ☐

23. பண்டாரவன்னியனை நினைவுபடுத்தும் கல்வெட்டு உள்ள இடம்

அ) யாழ்ப்பாணம் ஆ) மன்னார் இ) கற்சிலைமடு ஈ) நோர்வே

(அ) ☐ (ஆ) ☐ (இ) ☐ (ஈ) ☐

24. நரி ஊளையிடும், சிங்கம்

அ) கனைக்கும் ஆ) உறுமும் இ) முழங்கும் ஈ) பிளிறும்

(அ) ☐ (ஆ) ☐ (இ) ☐ (ஈ) ☐

25. எட்டுத்தொகை, பத்துப்பாட்டு எனும் நூல்கள் தோன்றிய காலம்

அ) முதற்சங்ககாலம் ஆ) கடைச்சங்ககாலம்
இ) இடைச்சங்ககாலம் ஈ) பிற்காலம்

(அ) ☐ (ஆ) ☐ (இ) ☐ (ஈ) ☐

26. தோன்றல் திரிதல் கெடுதல் புணர்ச்சிகளை இப்படிக் கூறுவர்

அ) மாறுபடு புணர்ச்சி ஆ) மாறிய புணர்ச்சி
இ) இயல்புப்புணர்ச்சி ஈ) மாறாப் புணர்ச்சி

(அ) ☐ (ஆ) ☐ (இ) ☐ (ஈ) ☐

27. மோர் என்று பெயர் படைத்தது எங்கே?

அ) வானத்தில் ஆ) நிலத்தில் இ) கடலில் ஈ) ஆய்ச்சியர் கையில்

(அ) ☐ (ஆ) ☐ (இ) ☐ (ஈ) ☐

28. ஆசுகவி எனப்படுபவர்

அ) கம்பர் ஆ) ஔவையார் இ) காளமேகப்புலவர் ஈ) ஒட்டக்கூத்தர்

(அ) ☐ (ஆ) ☐ (இ) ☐ (ஈ) ☐

29. குறள்: மனதறியப் பொய் பேசக்கூடாது. பேசினால் அது மனதை

அ) காட்டும் ஆ) சுடும் இ) வெட்டும் ஈ) தட்டும்

(அ) ☐ (ஆ) ☐ (இ) ☐ (ஈ) ☐

30. அன்னசத்திரம் என்பது

அ) அங்காடி ஆ) சமையலறை இ) தண்ணீர்ப்பந்தல்

ஈ) வழிப்போக்கருக்கு உண்டியும் உறைவிடமும் கொடுக்குமிடம்

(அ) ☐ (ஆ) ☐ (இ) ☐ (ஈ) ☐

(30 புள்ளிகள்)

## பகுதி 2

① கீழே தரப்பட்டுள்ள பாடநூல் வினாக்கள் ஆறில் **ஐந்திற்கு** முழுவிடை எழுதுக.

1. இலையின் பல்வேறு பருவங்களையும் காட்டும் சொற்களை ஒழுங்கு முறையில் தருக.

___

___

2. வன்னியின் வரலாற்றுப் புகழ்பூத்த இரு மன்னர்களும் யாவர்?

___

___

3. உலக மக்கள் அனைவரும் உறவினரே என்று கணியன் பூங்குன்றன் பாடிய பாடல் வரியைத் தருக.

4. அதியமான் நெல்லிக்கனியை தான் உண்ணாமல் ஔவைக்குக் கொடுத்த காரணம் யாது?

5. அறநெறிச்செய்யுள் பாடத்தில் உமக்கு மிகப் பிடித்த குறள் ஒன்றின் கருத்தைத் தருக.

6. காளமேகப் புலவர் குடித்த மோரின் தன்மையையும் அதன் முன்னைய பெயர்களையும் தருக.

(புள்ளிகள் 10)

② கீழே தரப்பட்டுள்ள இலக்கண வினாக்கள், ஆறில் ஐந்திற்கு விடை தருக:

1. வேற்றுமை உருபுகள் எத்தனை வகைப்படும்?

2. ஆசிய விளையாட்டுப் போட்டியில் தமிழ்நாடு வென்றது. இச் சொல்லியத்தில் வரும் ஆகுபெயர் எவ்வகை?

3. தோன்றா எழுவாய் வருகின்ற சொல்லியம் ஒன்று தருக.

4. விகாரப்புணர்ச்சி மூன்று வகைப்படும் அவற்றைத் தருக.

5. கீழ்வரும் எச்சவினைகள எவ்வகையென இனங்கண்டு எழுதுக.

அழுகிய ______________________ செய்யாது ______________________

6. இடைச்சொற்களின் வகைகள் இரண்டு தருக.

(புள்ளிகள் 5)

③ கீழே தரப்பட்டுள்ள மொழியியல் வினாக்கள்,ஆறில் ஐந்திற்கு விடை தருக.

1. கீழே தரப்பட்டுள்ள உயிரினங்ளின் ஒலிக்குரிய பெயர்களைத் தருக.

   நாய் ______________________ கிளி ______________________

2. எழுத்துப் பிழைகளைத் திருத்தி எழுதுக.

   பண்டாரவன்னியனது ஆற்றலும் உருதியும் ஆங்கிழேயப் படைகலை வியப்பிற்கு உல்லாக்கின.

   ______________________________________________

   ______________________________________________

3. கீழ்வரும் சொற்களுக்கு பொருள் தருக.

   எழில் ______________________ கேளிர் ______________________

4. பண்டைக்காலத்தில் தமிழர் ______________________ அமைத்துத் தமிழ் வளர்த்தனர். (களகம், கழகம்)

5. **'ஒற்றைக்காலில் நிற்றல்'** என்ற மரபுத்தொடரை வைத்து சொல்லியம் எழுதுக.

   ______________________________________________

   ______________________________________________

6. தொடர்ச் சொல்லியமாக்குக.

   தமிழினி கடைக்குச் சென்றாள்.

   தமிழினி கறிகாய்கள் வாங்கினாள்.

   ______________________________________________

   ______________________________________________

(புள்ளிகள் 5)

④ பாடலைப் படித்து அதன் கீழுள்ள வினாக்களுக்கு விடை தருக:

சித்திரை பிறந்தது இத்தரை மலர்ந்திட
வந்தது இளவேனில்! வந்தது இளவேனில்!
சிறுசெடி கொடிமரம் புல்பூண்டெல்லாம்
சிரித்தன மலராலே சிரித்தன மலராலே
வண்டுகள் பாடிடும் தேன்குடித்தாடிடும்
தென்றல் வீசிவரும் தென்றல் வீசிவரும்
பாடிடும் மயிலினம் ஆடிடும்
கூத்திடும் அழகெல்லாம் கூத்திடும் அழகெல்லாம்
குவிமலர்ச் சோலையுள் கூடுவர் மக்கள்
மகிழ்வினில் ஆடிடுவர் மகிழ்வினில் ஆடிடுவர்
இன்பம் பொங்கிட இயற்கையின் படைப்பில்
வந்தது இளவேனில் வந்தது இளவேனில்!

1. சித்திரை பிறந்ததும் வந்தது என்ன?

___

2. சித்திரை வந்ததால் சிரித்தவை எவை?

___

___

3. வண்டுகள் என்ன செய்கின்றன?

___

___

4. குவிமலர்ச் சோலையுள் கூடுபவர்கள் யார்?

___

___

5. இப்பாடலில் பாடி ஆடுபவை யாவை?

___

___

(புள்ளிகள் 10)

## ⑤ தரப்பட்டுள்ள சொற்களைக் கீறிட்ட இடங்களில் பொருத்தமாக எழுதி பந்தியை நிறைவு செய்க.

| | | | |
|---|---|---|---|
| **தாகத்துடன்** | **தண்ணீர்** | **வெப்பம்** | **கார்** |
| **சுவையின்றி** | **வெய்யில்** | **பக்கத்தில்** | **அத்தொழில்** |

எங்கள் தாயகம் அமைந்துள்ள தென்கிழக்கு ஆசிய நாடுகளில் ____________________ அதிகம். கார்காலமோ கோடைகாலமோ இளவேனிலோ முதுவேனிலோ எக்காலம் ஆயினும் வெப்பந்தான். வெப்பத்தின் அளவில் ஏற்றம் இறக்கம் இருக்கும். முதுவேனில் காலத்தில் உலலைச் சுட்டெரிக்கும் ____________________ எறிக்கும். வெய்யிற் காலத்தில் உடலைக் குளிர்ச்சியாக வைத்திருக்கவும் தாகத்தைத் தீர்ப்பதற்கும் மோர் சிறந்தது. எனவே, அக்காலத்தில் மக்கள் மோரை அதிகம் விரும்பிப் பருகுவர். ஆதலால், ____________________ செய்வோர் மோர் கரைத்து விற்பர். வெய்யிற் காலத்தில் கூடுதலாக மோர் தேவைப்படுவதால் மோர் விற்போர் மோரில் நீரைக்கலப்பர். ஒருநாள் மிகுந்த ____________________ வந்த ஒரு புலவர் மோர் விற்பவளிடம் மோர் வாங்கிக் குடித்தார். அம்மோர் அதிகம் தண்ணீர் கலக்கப்பட்டிருந்ததால் சுவையின்றிச் சப்பென்றிருந்தது. இது மோரோ? என்று மோர்க்காரியிடம் கேட்டுச் சிரித்தார். அப்போது ____________________ நின்றவர் ஏன் சிரிக்கிறீர்கள் என்று வியப்புடன் கேட்டார். இதோ! மோர் என்று விலைக்கு வாங்கிக் குடிக்கிறேனே! இதை நான் முன்னரும் குடித்திருக்கிறேன். ஆனால், அதற்குத் ____________________ என்று பெயர். விலையின்றிக் கிடைத்தது. அதற்கு முன் நான் இதைக் கார் என்ற பெயரில் விண்ணில் கண்டிருக்கிறேன். ஆனால், குடிக்கவில்லை என்றார். கேட்டவருக்கு விளங்கவில்லை.

''ஐயா! மோர் என்று நான் குடித்த பொருள் இந்தப் பானைக்குள் வருவதன் முன் நீரென்ற பெயருடன் இருந்தது. அந்த நீர் மழையாய் நிலத்துக்கு வருவதன் முன் வானில் ____________________ என்ற பெயரில் இருந்தது. ஒரே பொருள் மூன்று பெயர்களுடன் எங்கும் நிறைந்து விளங்குவதை எண்ணிச்சிரித்தேன்'' என்றார் புலவர். கேட்டவர் மோர்க்காரியைத் திட்டிக்கொண்டு இடத்தை விட்டு அகன்றார்.

(புள்ளிகள் 10)

⑥ **வாழிடமொழியில் தரப்பட்டுள்ள பந்தியை தமிழ்மொழியில் மாற்றி எழுதுக.**

Jeg er 12 år gammel og heter Kavitha. Mamma og pappa ser på meg som deres yndlingsbarn. Når jeg og mamma er alene, synger jeg en sang hun liker veldig godt. Dette gjør henne glad. Hver kveld tar jeg og pappa med oss valpen vår til den nærmeste parken. Der møter jeg mine venner og leker med ball.

(புள்ளிகள் 10)

## ⑦ பின்வரும் தலைப்புக்களில ஒன்றைத் தெரிவு செய்து, 125 சொற்களுக்குக் குறையாமல் கட்டுரை எழுதுக.

1. தமிழ் இலக்கிய வளம்
   - தமிழின் தொன்மை
   - இனிமை, இளமை, செம்மை
   - முத்தமிழ்ப் பிரிவு
   - தமிழிலுள்ள இலக்கியங்கள்
   - கழகம் அமைத்து தமிழ் வளர்த்தமை

2. பண்டாரவன்னியன்
   - புகழ்பூத்த ஆட்சி
   - வரலாற்றுச் சிறப்பு
   - கைப்பற்றப்பட்ட கோட்டைகள், பீரங்கிகள் கைப்பற்றல்
   - ஆங்கிலேயர் மன்னார், யாழ்ப்பாணம், திருகோணமலை ஆகிய இடங்களில் இருந்து படையெடுத்தல்
   - பின்வாங்கி மறைந்திருந்து படைதிரட்டல்
   - காட்டிக்கொடுக்கப்படல்
   - உயிர்நீத்தல், நடுகல் அமைத்தல்

**3. தைப்பொங்கல்**

- தை முதலாம் நாள் - புத்தாண்டு
- தை பிறந்ததும் நெல் அறுவடை செய்தல்
- கதிரவனே மழைக்கும் பயிர் வளர்ச்சிக்கும் காரணம்
- தமிழன் தை மாதத்தை எல்லா வளங்களும் நிறைந்த நாளாகக் கொண்டான்
- கதிரவனைப் போற்றுவதற்கு பொங்கல் பொங்கப்படுகின்றது
- முற்றத்தில் கோலமிடல்,தோரணம்,வாழை,செங்கரும்பு நாட்டல்
- விருந்தோம்பல்
- உழவர்க்கு மட்டுமல்லாது எல்லோர்க்கும் பொதுவானது

(புள்ளிகள் 20)